[1979 மார்ச் 14

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சடையனேரி கால்வாயின் கீழுள்ள 13 மானுவாரி குளங்களுக்கு ஸ்ரீவைகுண்டம் அணை மறுகால் பாயும்போது தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனையை மாற்ற தற்சமயம் உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

Milk booths in Madras City

*Q. No. 393 : Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state the details of the conditions under which the Tamil Nadu Dairy Development Corporation is leasing out the Milk Booths in Madras City?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தமிழ்நாடு பால்வள நிறுவனம், பால் விநியோகிக்கும் டெப்போக்களை பால் விநியோகம் செய்வதற்காக சென்னை நகரில் வாடகைக்கு விடுவதில்லை. தனியார் எவருக்கும் வாடகைக்கு விடுவதாகத் திட்டம் ஏதும் தற்போது இல்லை. எனினும் இந்த டெப்போக்கள் ''தமிழ்நாடு பதநீர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு'' நீரா என்ற பானம் விற்பனை செய்வதற்காக மாத வாடகை ரூ. 7.50க்கு (ஏழு ரூபாய் ஐம்பது பைசா மட்டும்) பதநீர் காலங்களில் அதாவது மார்ச் முதல் ஜூன் வரையிலான மாதங்களில் கொடுக்கப்படுகிறது.

கச்சா முந்திரி விநியோகம்

*வினா எண். 394.—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உற்பத்தியாகும் 13 ஆயிரம் டன் கச்சா முந்திரியை அரசே நேரடி கொள்முதல் செய்து தொழிலாளர்களின் வீதாச்சார அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது ; அது போன்ற திட்டம் எதுவும் இல்லை.